# இந்து தீபம்


## 2007



இந்து மன்றம்

கொழும்பு பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு பல்கலைக் கழகம்

# இந்து மன்றம்

பெருமையுடன் வழங்கும்

# கலைவிழா 2007

பிரதம அதிதி : க.வி. விக்னேஸ்வரன்
(ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர்)

புதிய கதிரேசன் மண்டபம்
பம்பலபிட்டி

**05-08-2007**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HINDU SOCIETY
# UNIVERSITY OF COLOMBO

## OFFICE BEARERS 2006/2007

| | | |
|---|---|---|
| **Patron** | : | Vice Chancellor<br>University of Colombo. |
| **Senior Treasurer** | : | Mr. R. Sri Kanthan |
| **President** | : | Mr. T. Suthakar |
| **Vice Presidents** | : | Mr. C. Mahinthan<br>Mr. R. Nisanthan |
| **Joint Secretaries** | : | Mr. T. Vimalarajah<br>Miss. M. Kosalai |
| **Treasurer** | : | Mr. S. Kethies |
| **Editor** | : | Miss. T. Sharmila |
| **Sub Editors** | : | Miss. S. Pratheepa<br>Mr. S. Suresh Kumar |
| **Committee Members** | : | Mr. K. Thivaharan<br>Mr. S. Mohanraj<br>Miss. R. Jasiththa<br>Mr. G. Rajeev<br>Mr. R. Nishanthan<br>Miss. M. Thaxshanjini<br>Miss. K. Durga<br>Mr. S. Mohanarajan<br>Mr. A.R. Thavamayooran<br>Mr. S. Sivasenthooran |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from Vice-Chancellor

I am happy to send this short congratulatory message to be included in the Souvenir of the Hindu Soceity - 2007. It is heartening to note that the students of the University of Colombo are, in addition to their acadamic activities, engaged in extra-curricular activities which promote mutual understanding and harmonious relations amongst the student community. Amongst various student societies, the Hindu Society of the University of Colombo has been in existence for a long time and it has been conducting activities which have been beneficial to the student community in general.

It is of utmost importance that societies of this nature should function in a manner which will respect the plural character of the University community and act with a deep sense of responsibility. This has been a healthy tradition followed in the University of Colombo by successive office bearears of this Society. I am happy to note that the functioning of the Hindu Society has upheld this tradition in the past year as well. I take this opportunity to congratulate the office bearers of the Society for carrying on the tradition. Well done!

**Prof. Tilak Hettiarachchy**
Vice Chancellor
University of Colombo



# வாழ்த்துச் செய்தி

கொழும்பு பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றத்தினால் நடாத்தப்படும் வருடாந்த விழாவும் இந்து தீபம் மலரின் வெளியீட்டு நிகழ்வும் சீரும், சிறப்புடன் நடைபெற அருளுமாறு, எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

"சமய சாதனைகளின் நுட்பம் எல்லாம் கொள்கைகளில் இல்லை அதனை கடைப்பிடிப்பதில்தான் அடங்கியுள்ளது. நல்லவனாக இருந்து நன்மை செய்வதுதான் சமய சாதனையின் முழுப்பலனாகும். உன்னிடம் உள்ள தெய்வீகத்தன்மைதான், கடவுள் என்ற ஒருவர் இருக்கின்றார் என்பதற்குரிய சான்றாகும். மகத்தான காரியங்களை செய்வதற்காக இறைவன் நம்மை தேர்ந்தெடுத்து இருக்கின்றார் என்றும் அவற்றினை நாம் செய்து முடிப்போம் என்று உறுதியாக நம்புங்கள்." என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

அந்த நம்பிக்கையுடன் இந்த ஆன்மீக பணியினை ஆற்றிவரும் மாணவர்களாகிய நீங்கள் மட்டுமல்லாது, சமுதாயத்திற்கும் மன மகிழ்ச்சியினையும், அமைதியினையும் அளிக்கும். உங்களுடைய பணி மேலும் உயர இறைவன் அருள்புரிய வேண்டுகிறேன்

**சுவாமி சர்வரூபானந்தா**
தலைவர்
ராமகிருஷ்ண மிஷன் கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம அதிதியின் வாழ்த்துச் செய்தி

வருடந்தோறும் "இந்துதீபம்" ஏற்றி வரும் கொழும்பு பல்கலைக்கழக இந்து மாணவ மன்றத்தினர் பாராட்டுக்குரியவர்கள். பல சமயப் பணிகளில் அவர்கள் ஈடுபட்டு வருவதாக அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

பலதரப்பட்ட மக்களை அவர்களின் வேறுபட்ட தரத்தில் இருந்து மேம்படுத்தி ஆத்மீக உன்னத நிலைக்கு இட்டுச் செல்லக் கூடிய அதன் சிறப்பம்சமே இந்து மதத்தில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதொன்று. வேற்றுமைப்பட்ட மனோநிலைகளைக் கொண்ட மக்களை ஞானம், பக்தி, கர்மம், தியானம் என்ற பாதையின் ஊடாக அவர்களுக்கேற்றவாறு வழிநடத்திச் செல்கிறது இந்து மதம். கறுப்பசாமி, காட்டேரி, மதுரைவீரன் என்று வழிபாடு செய்பவர்களும் இந்துக்களே. அத்வைத தத்துவத்தை நிறுவி நிலை கொள்ளச் செய்த ஆதிசங்கரரும் இந்துவே.

பண்டிகைகளைக் கொண்டாடுதல், திருத்தல யாத்திரைகளை மேற்கொள்ளல், இல்லாதவர்களுக்கு இரங்குதல், "இந்துதீபம்" வெளியிடல் போன்ற கைங்கரியங்கள் பல்கலைக்கழக இந்து மாணவ மன்றத்தினால் இயற்றப்படும் சமய, சமூகப் பணிகளும் சில வரவேற்கத்தக்க பணிகள், வாழ்த்த வேண்டிய பணிகள்.

அதே நேரம் இன்றைய கால கட்டத்திற்குரிய ஒரு கடப்பாடும் எமக்குண்டு. எங்கள் மதத்தின் சீரிய கொள்கைகள், கோட்பாடுகள் பற்றிப் போதிய அறிவு பெறும் அதே நேரத்தில் இலங்கையில் பின்பற்றப்படும் மற்றைய மதங்களின் அடிப்படைக் கொள்கைகளையும் எங்கள் மாணவ, மாணவிகள் அறிந்து வைத்திருத்தல் அவசியம். மதங்களின் வெளிவாரியான வேற்றுமைகளை அறிந்து வைத்திருக்கும் அதே நேரத்தில் அவற்றின் ஊடாக இழைந்தோடும் ஒற்றுமைக் கீற்றுக்களையும் நாம் உணர்ந்து அடையாளம் காணவேண்டும். சமய ஒப்பியல்பு கருத்துக்கள் உங்கள் 'இந்து தீபம்' ஊடாக வெளிவரலாம்.



மதங்கள் பல இன்று மக்களை வேற்றுமைப்படுத்தும் கருவிகளாக மாறி வருகின்றன. இது பிழை. ஆதி மதாசிரியங்களின் அந்தரங்க எண்ணங்களுக்கு இக்கருத்து முரணானது. இன்றைய மத அபிமானிகளின் பல் சமயச் சார்பாளர்களின் அகந்தையின் வெளிப்பாடே இந்நிலை. மதங்களால் மக்கள் பிரித்தொதுக்கப்படும் போது அங்கு ஒரு இந்துவானவன் இருந்து கொண்டு பிரிவுகளை எதிர்த்து மனிதத் தன்மையையும் மக்களின் உள்ளார்ந்த மன ஒற்றுமையையும் வலியுறுத்த அதற்கான அத்தியாவசிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும். இந்து மட்டும்தான் வேற்றுமையில் ஒற்றுமை காண முடியும். பல சமய ஒப்பீட்டு அறிவை விருத்தி செய்ய உங்கள் மன்றம் ஆவன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

உங்கள் மன்றம் மேன்மேலும் மாணவமாணவியர் சமுதாயத்தை உன்னத நிலைக்கு இட்டுச் செல்ல இறைவன் எந்நாளும் துணை புரிவானாக.

**நீதியரசர். க.வி. விக்னேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

ஏறக்குறைய பதினைந்து வருடங்களுக்கு மேலாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களினதும் இந்து மாணவர்களை ஆத்மீக நெறியில் வழிநடத்தி தனது பணியினைச் செய்து நிற்கின்ற இந்து சங்கம் இவ்வருடமும் தனது கலைவிழாவினை பல சிரமங்களுக்கு மத்தியில் அரங்கேற்றி நடாத்திக் கொண்டிருப்பது பெரும் பொருளாளர் என்ற முறையில் மட்டற்ற மகிழ்ச்சியினைத் தந்து நிற்கின்றது.

இந்தக் கலைவிழாவினை வெறுமனே ஒரு பொழுதுபோக்கு என்ற கண்ணோட்டத்தில் நோக்காது பிறிதொரு பார்வையினை கருத்தொரு மிப்புடன் செலுத்தும்பொழுது மட்டுமே அதன் உண்மையான சிந்தனைக் கருவினை விளங்கிக் கொள்ள முடிகின்றது. மறைந்து போயிருக்கின்ற கலைச் செல்வங்களை சைவத்தை இணைத்து வெளிப்படுத்தி மாணவர் உள்ளங்களில் மட்டுமன்றி சிறுவர் முதியவர் என்ற வயதுபேதமின்றி யாவரிடத்திலும் ஒரு ஆத்மீக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் செயற்பாடு ஒரு புறமிருக்க, மறைந்திருக்கும் கலைத்திறன்களை வெளிக் கொணர் வதற்கு ஒரு களம் அமைத்துக் கொடுக்கும் ஒரு நிகழ்வாகவும் இக் கலைவிழா அமைந்திருப்பதனை ஆழ நோக்கின் அறிந்து கொள்ள முடிகின்றது. கற்றல் செயற்பாடுகளினால் களைத்து நிற்கும் மாணவர் குழாம் தமக்குரிய பீட மாணவர்களையே சரிவர புரிந்து மாணவர்களுடன் இணைப்புக்களை ஏற்படுத்தி தமக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வு ஒன்றினை உருவாக்கிக் கொள்வதென்பது வேக நடை போட்டு உலாவும் இன்றைய மாணவர் சமூகத்தினரிடையே படிப்படியாக அருகி வருவதனை ஆசான் என்ற முறையில் அண்மைக் காலங்களில் அவதானித்து வந்திருக்கின்றேன். அத்தகையதொரு விரும்பத்தகாத இடைவெளியினை இவ்விதமானதொரு நிகழ்வு ஓர் உறவுப் பாலத்தினை மாணவர்களிடையே ஏற்படுத்தி கொடுக்குமாயின் அது இந்நிகழ்வின் வெற்றியினை அடையாளப்படுத்தும் ஒரு சின்னமாக எடுத்துக் கொள்ளலாம் என்றே என் மனம் கூறுகின்றது.



எனது அன்பு மாணவச் செல்வங்களே, இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியினை ஒழுங்கமைக்கும் பொழுது நீங்கள் ஒன்றுபட்டு வழங்குகின்ற பங்களிப்பே நிகழ்வின் வெற்றியினை எடைபோடும் ஓர் அளவுகோலாக இருக்க முடியும். நிச்சயமாக உங்களில் பலரினது அர்ப்பணம் இக்கலைவிழாவிற்கு கிடைத்திருக்கின்றது. ஆனால் ஒரு சிலர் எந்தவிதமான அலட்டிக்கொள்ளலும் இல்லாமல் ஒதுங்கி தூரத்தே நின்று வேடிக்கை பார்ப்பதும் என் கண்களில் தெரிகின்றது. இந்த பல்கலைக்கழக வாழ்க்கை மூன்றோ, நான்கோ அல்லது ஆகக் கூடியது ஐந்தோ வருடங்களில் முடியப்போகின்றது. அதற்குள் ஏன் ஒதுங்கி நிற்க வேண்டும்? உங்கள் மனக் குறைகள் பேதங்கள் எல்லாவற்றையும் ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு சங்கம் தழைத்து கிளை பரப்பிட நீங்கள் எல்லோரும் முன் வர வேண்டும் என்பதே என் தாழ்மையான வேண்டுகோள்.

இவ்விழா பெருவிழாவாக நடைபெறுவதற்கு செல்வத்தை அள்ளி வழங்கிய பெருந்தன்மையானவர்களே, பல்வேறு வடிவில் உதவிகள் வழங்கிடும் அனுசரணையாளர்களே உங்கள் எல்லோருக்கும் எமது சங்கத்தின் சார்பாக இதயபூர்வமான நன்றிகள். இவ்விழா வெற்றி பெறுவதற்கு உழைத்து நிற்கின்ற எமது பல்கலைக் கழக இந்து மாணவ சமூகத்திற்கு குறிப்பாக அல்லும் பகலும் உழைத்து நிற்கும் செயற்குழுவைச் சேர்ந்த எல்லோருக்கும் இத் தருணம் எனது இதயத்திலிருந்து வெளிப்பட்டு நிற்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

இறுதியாக உங்கள் படைப்புக்கள் மூலம் இந்து வாழ் உலகத்திற்கு நீங்கள் வழங்கிநிற்கும் செய்திகள் இக்கலை விழா ஊடாக சென்றடைந்து உருப்பெறும் ஆத்மீக நெறி ஒவ்வொருவரையும் நல்லதொரு குடிமகனாக உருவாக்கித் தந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**ஆர். ஸ்ரீகாந்தன்**
*சிரேஸ்ட பொருளாளர்*
*கொழும்பு பல்கலைக்கழக இந்துமன்றம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரிடம் இருந்து...

கொழும்பு பல்கலைக்கழக இந்துமன்றமானது கடந்த பல தசாப்தங்களாக தனது பணியினை சிறப்பாக ஆற்றிவருகின்றது. அந்த வகையில் இந்த வருடமும் சிறப்பாக நடைபெறவிருக்கும் கலைவிழாவில் வெளியிடப்பட விருக்கும் 'இந்து தீபம்' மலரிற்கு தலைமையுரையினை வழங்குவதனையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தென்னிலங்கையில் தமிழ் மாணவர்கள் பல இடர்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டு கல்வியினை தொடர்வதோடு மட்டும் இல்லாமல் எமது சமய, கலாச்சார விழுமியங்களை பாதுகாப்பதற்காகவும் செயற்பட்டு வருகின்றனர். அந்தவகையில் எமது மன்றம் தொடர்ந்தும் பாடுபட்டு வருகின்றது என்றால் மிகையாகாது.

பல்கலைக்கழகம் வெறுமனே கல்விக்கூடம் மட்டுமல்ல. தொன்றுதொட்டு எமது கலாச்சார மரபுகள், விழுமியங்களை பேணிவரும் ஒரு கலைக்கூடம். இந்த வகையில் எமது செயற்பாடுகளினை தீவிரம் காட்டி வருகின்றோம். குறிப்பாக பல்கலைக்கழக மாணவர் மத்தியில் சமய விழுமியங்கள், கலாச்சார மரபுகள் என்பனவற்றை கடைப்பபடிப்பதை தீவிரப்படுத்தல், சமய விழாக்களை கொண்டாடுதல், தலயாத்திரைகளை மேற்கொள்ளுதல் மற்றும் கொழும்பு மாவட்ட தமிழ் மொழிமூல பாடசாலை மாணவர்களுக்கு சமய அறிவினை புகட்டும், தூண்டுவிக்கும் முகமாக பல்வேறு போட்டி நிழ்ச்சிகளை நடாத்தி வருகின்றோம்.

இருப்பினும் எம் உறவுகள் மழைக்காக கூட பாடசாலையில் ஒதுங்க முடியாத சூழ்நிலையில் வாழ்கின்றார்கள். இதனை எண்ணும் போதே மனம் கலங்கித்தான் போகின்றது. எமது பண்பாடுகளும் கலாச்சார மரபுகளும் எம்மை அறியாமலே சிதைந்து போகின்றது அல்லது சிதைக்கப்படுகின்றது. இவற்றைக் கட்டிக் காப்பதில் எமது மன்றம் ஒரு துடுப்பாகவேனும். செயற்படுகின்றது என்பதையிட்டு மகிழ்ச்சி கொள்கின்றோம்.

கலைவிழா மலர் வெளியீட்டுக்கு முன்வந்து பல்வேறு வழிகளிலும் உதவி ஒத்தாசை நல்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது மன்ற செயற்பாடுகள் இனிவரும் சகோதரர்களுக்கு ஓர் வழிகாட்டியாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன்.

**தியாகராஜ் சுதாகர்**
தலைவர்



# இணைச்செயலாளரின் எண்ணத்திலிருந்து...

கொழும்பு பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றம் ஆற்றிவரும் சீரிய பணிகள் பலவற்றுள் தலையாயதாகக் காணப்படுவது வருடாந்தக் கலைவிழா நிகழ்வேயாகும். 05-08-2007 அன்று நடைபெறவிருக்கிற கலைவிழா மற்றும் அன்றைய தினம் வெளியிடப்படவிருக்கின்ற இம்மலர் ஆகியவற்றின் பங்குதாரர்களாக நாம் இருக்கின்றோம் என்ற நிகழ்வுண்மை மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

இன்றைய நாட்டுச் சூழல் மற்றும் பல்கலைக்கழகக் கல்வி நெருக்கடிகளுக்கிடையில் ஆக்க பூர்வமான சைவத் தமிழ்ப் பணிகளைப் புரிவது என்பது வாழ்த்தி வரவேற்கப்படவேண்டிய விடயமொன்றே. அந்த வகையில் கொழும்பு பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றமானது தன்னால் முடிந்தளவு காத்திரமான பங்களிப்பைத் தொடர்ச்சியாக ஆற்றி வருகிறது. கொழும்பு மாவட்ட தமிழ்மொழி பேசும் மாணவர்களது சமயத்திறனை வளர்த்தல், கலைநிகழ்ச்சிகளை அரங்கேற்றல், நூல் வெளியீடு, நவராத்திரி மற்றும் தைப்பொங்கல் விழா நேரங்களில் அனைத்துப் பீட மாணவர்களையும் உள்ளீர்த்துக் கொண்டு விழாக்களை ஒழுங்கு செய்தல் ஆகியவை கொழும்பு பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றத்தின் பயன் மிக்க கைங்கரியங்களிற்கான சான்றுகளாகின்றன.

இவ்வருடமும் வழமை போலவே மேற்சொன்ன பணிகளை எமது செயற்குழு வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது. எங்களுடைய செயற்பாடுகள் அனைத்திற்கும் மகுடம் சூட்டுகிற விடயமாக காணப்படுகிற கலைவிழா 2007 ஐச் சிறப்பாக நடத்துவதற்கான முனைப்புடன் எமது செயற்குழு செயற்படுவது மனநிறைவைத் தருகிறது. மாணவர்களுடைய ஆக்கங்கள் பலவற்றை ஏந்தி வருகிற இம்மலர் சைவத்தமிழ் வாசகர்களிடையே பலத்த வரவேற்பைப் பெறும் என்ற நம்பிக்கை எமதுள்ளதில் இருக்கிறது.

எங்களுடைய பணிகளைச் சிறப்பாகச் செய்து முடிப்பதற்கு பல வகைகளிலும் ஆவன செய்த அனைத்து நல்லுள்ளங்களிற்கும் எமது நன்றியதலை இத்தருணத்தில் தெரியப்படுத்துவதோடு விதைகளாகிய எங்களை விருட்சங்களாக்குவதற்கு துணைபுரிந்த நல்லோர் அனைவருக்கும், இம்மலரினை நன்றியுடன் காணிக்கையாக்குகின்றோம். கலைவிழா சிறப்புற நடந்தேற உங்கள் ஆதரவைக் கோரிநிற்பதோடு இறையருளையும் வேண்டிநிற்கிறோம்.

**தவராஜா விமலராஜா**
**கோசலை மனோகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து......

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்"

அனைத்து உயிர்களினிடத்தும் அன்பினைச் சொரிதலையே தனது ஜீவநாதமாகக் கொண்ட எமது இந்துமதத்தினைப் போற்றும்வகையில், ஆண்டுதோறும் விழாவெடுத்து "இந்துதீபம்" இதழை ஏற்றிவைக்கிறது கொழும்பு பல்கலைக்கழக இந்துமன்றம்.

அந்தவகையில் இவ்வருடமும் இந்துதீபத்தினை இருள்களையும் ஒளிமுதலாக ஒளிரவிடுவதில் பெருமையடைகின்றேன்.

எமது மாணவர்களின் கன்னி ஆக்கங்களையும் இதயத்துணர்வுகளையும் தாங்கி சுடர்விட்டெரிகின்ற இந்துதீபம், அவர்களது திறமைகளை வெள்ளிடைமலையாய் வெளிப்படுத்துமெனவும், பாராட்டைப் பெறு மெனவும் நம்புகின்றேன்.

எமது இளம் படைப்பாளிகளின் உழைப்பின் பயனாக உங்கள் கரங்களில் தவழும் இம்மலரிலுள்ள ஆக்கங்களில், தவறுகளெதுவும் காணப்படின் அவற்றை மன்னிக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

கல்வியின் அழுத்தங்களுக்கும், காலச்சக்கரத்தின் ஓட்டத்திற்கும் இடையில் இம்மலர் வெற்றிகரமாய் மலர்ந்து மணம்பரப்ப ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்இதயங்களுக்கும், மற்றும் மிகக்குறுகிய காலத்தில் சிறப்பாக இவ்விதழை அச்சிட்ட அச்சகத்தாருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்வரும் தசாப்தங்களிலும் எமது "இந்துதீபம்" தொடர்ந்து பிரகாசித்து ஒளிரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றி.

**ஷர்மிளா தில்லைநாதன்** *(இதழாசிரியர்)*



இடமிருந்து வலமாக - இருப்பவர்கள்
T. சர்மிளா, S. சுரேஷ்குமார், T. விமலராஜ், C. மகிந்தன், திலக் ஹெட்டியாராச்சி, R. ஸ்ரீ காந்தன், T. சுதாகர், R. நிசாந்தன், M. கோசலை நிற்பவர்கள்
S. பிரதீபா , S. மோகனராஜ், A.R. தவமயூரன், R. நிஷாந்தன், M. தாட்ஷாயணி, S. சிவச்செந்தூரன், S. மோகன்ராஜ், K. துர்க்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் இதயத்திலிருந்து......

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்"

அனைத்து உயிர்களினிடத்தும் அன்பினைச் சொரிதலையே தனது ஜீவநாதமாகக் கொண்ட எமது இந்துமதத்தினைப் போற்றும்வகையில், ஆண்டுதோறும் விழாவெடுத்து "இந்துதீபம்" இதழை ஏற்றிவைக்கிறது கொழும்பு பல்கலைக்கழக இந்துமன்றம்.

அந்தவகையில் இவ்வருடமும் இந்துதீபத்தினை இருள்களையும் ஒளிமுதலாக ஒளிரவிடுவதில் பெருமையடைகின்றேன்.

எமது மாணவர்களின் கன்னி ஆக்கங்களையும் இதயத்துணர்வுகளையும் தாங்கி சுடர்விட்டெரிகின்ற இந்துதீபம், அவர்களது திறமைகளை வெள்ளிடைமலையாய் வெளிப்படுத்துமெனவும், பாராட்டைப் பெறுமெனவும் நம்புகின்றேன்.

எமது இளம் படைப்பாளிகளின் உழைப்பின் பயனாக உங்கள் கரங்களில் தவழும் இம்மலரிலுள்ள ஆக்கங்களில், தவறுகளெதுவும் காணப்படின் அவற்றை மன்னிக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

கல்வியின் அழுத்தங்களுக்கும், காலச்சக்கரத்தின் ஓட்டத்திற்கும் இடையில் இம்மலர் வெற்றிகரமாய் மலர்ந்து மணம்பரப்ப ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்இதயங்களுக்கும், மற்றும் மிகக்குறுகிய காலத்தில் சிறப்பாக இவ்விதழை அச்சிட்ட அச்சகத்தாருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்வரும் தசாப்தங்களிலும் எமது "இந்துதீபம்" தொடர்ந்து பிரகாசித்து ஒளிரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றி.

ஷர்மிளா தில்லைநாதன் (இதழாசிரியர்)





இடமிருந்து வலமாக - இருப்பவர்கள்
T. சர்மிளா, S. சுரேஷ்குமார், T. விமலராஜ், C. மகிந்தன், திலக் ஜெகட்டியாராச்சி, R. ஸ்ரீ காந்தன், T. சுதாகர், R. நிரோஞ்சன், M. கோசலை நிற்பவர்கள்
S. பிரதீபா, S. யோகவுராஜ், A.R. தவையூரன், R. நிஷாந்தன், M. தர்ஷாயினி, S. சிவச்செந்தூரான், S. யோகேஸ்ராஜ், K. துர்க்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல்

வாழ்வியல் தத்துவங்கள் வலுவிழந்த நிலையில், வன்முறைகளும் வக்கிரங்களும் வானுயரச் சென்ற இன்றைய நிலமையில் ஒவ்வொரு மனிதனும் மீண்டும் வானரமாக வடிவமெடுத்துள்ளான். ஆசைகளின் அகல வாய்களுக்குள் அகப்பட்ட மானிடர்கள் அதனால் ஆட்கொள்ளப்பட்டு சுயநலத்தின் எவரெஸ்டைத் தொட்டு விட்டனர்.

நான், எனது என்ற கோட்பாடுகளை மையப்படுத்தி வாழ்க்கைச் சூத்திரத்தை வடிவமைத்துள்ள மனிதன், இச் சூத்திரத்தின் பால் செயற்பட்டு வெற்றிபெறத் தவறுவதில்லை. பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் இருக்கும் இடைவெளியே வாழ்க்கையென வரையறை செய்யப்படுகிறது; எமது மூளையின் மடிப்புகளுக்குள் செலுத்தப்படும் எமது சிறுவயது வளர்ப்பு முறை, எம்மைச் சுற்றியுள்ள சூழல், அன்றாடம் நாம் காணும் நடைமுறை மனிதர்கள் போன்ற காரணிகளே எமது வாழ்க்கை முறையைத் தீர்மானிக்கின்றது. நாம் அன்றாடம் காணும் நடைமுறைகளே வாழ்க்கை என்று எமது மனது எம்மை அறியாமலே ஏற்றுவிடுகிறது அதன்பால் எம்மைச் சுற்றி நாம் ஒரு வட்டத்தை இட்டு வாழ்க்கையை வரையறை செய்துவிடுகின்றோம். இதிலிருக்கும் உண்மை பொய்களை ஆராய்வதற்கு எவரும் விளைவதில்லை.

ஒவ்வொரு மனிதனும் தொடர்ச்சியாக அவன் காணும் நடைமுறைகளில் சிலவற்றில் அதிக ஆர்வம் கொண்டவனாக மாறுகிறான். அதனையே அவன் தனது வாழ்க்கை என கூறிக்கொண்டு அந்த இலக்கை அடைய மனிதத்துக்குரிய புனிதங்களை புதைகுழிக்குள் தள்ளுகிறான்.

பணமே வாழ்க்கையென பலர் சூளுரைக்கின்றனர், வெளிநாட்டு மோகத்தில் மூழ்கியோர் பலர் உண்டு. காதலே வாழ்வு என கூறுபவரும் உண்டு, காமத்தில் மூழ்கிய கயவர்களும் உண்டு. இப்படியான விடயங்களை வாழ்க்கையின் இன்பம், ஏன் பிறவியின் மோட்சம் என்று கூட நினைப்பவர்கள் எம்மில் பலர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன் எப்படி வாழவேண்டும் என உரைக்கும் பல வேதாந்த, சமய நூல்களின் சாரத்தை சற்றே பார்த்தோமானால் அவை கூறும் உண்மைகளின் உன்னதங்களை புரிந்து கொள்ள முடிகின்றது. அதனூடாக சிந்திக்கும் பொழுது மனிதன் வாழவேண்டிய வாழ்க்கை முறையும் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறையும் தெளிவாகிறது.

மனிதனானவன் தனக்குள் இருக்கும் நான் என்ற அகந்தையையும் எனது என்ற மமதையையும் வெளியேற்ற முனைய வேண்டும். சுருக்கமாக கூறினால் சுயநலத்தை கிள்ளி எறிய வேண்டும். சேர்த்த செல்வங்கள் அளவுடன் பேண வேண்டும். நேர்மை, நியாயம் உயிர் மூச்சாய் கொள்ள வேண்டும். இறை சிந்தனையில் இணையின்றி திகழ வேண்டும். வாழ்க்கையை மேன்மையடையச் செய்ய உலக மாயைகளை அடையாளம் காண்பது அவசியம். பதவி, பணம், பட்டம், இளமை, காதல், காமம் என்பவற்றை மாயை எனத் தெளிய வேண்டும். அதன் பால் செலுத்தும் அதிக ஆர்வங்களை தவிர்த்து இறைசிந்தனையும், தர்மத்தில் ஈடுபாடும், உயிர்களிடத்தில் அன்புமே உண்மையான வாழ்வியல் என்பதை உணர வேண்டும்.

எமக்குள் குடிகொள்ளும் கோபத்தையும், அதிக ஆசைகளையும், பிறர் மீது கொள்ளும் பொறாமைகளையும் களைந்து "அன்பே சிவம்" என்ற கோட்பாடுடன் வாழ்க்கைச் சக்கரத்தை செலுத்தும் போது, வாழ்க்கைப் பாதையில் சீரான போக்கையும் நிம்மதியையும், சாந்தத்தையும், அமைதியையும் அடையமுடியும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க வாய்ப்பில்லை. இதுவே பிறவிப்பயன் எனக் கொள்ளப்படுகின்றது.

"அன்பே சிவம்"



**இரா. ராஜீவ்காந்**
முதலாம் வருடம்
முகாமைத்துவ பீடம்



கீழ்ப்பிரிவு கவிதைப் போட்டியில்
முதலிடம் பெற்ற கவிதை

# அன்பு

அன்பே இனிய ஊற்று அதுவே எனது கூற்று

**"அன்னை" எனும் மூன்றெழுத்து, அன்பெனும் மூன்றெழுத்து**
**தந்தை எனும் மூன்றெழுத்து நட்பு எனும் மூன்றெழுத்து**
**அன்பு எனும் மூன்றெழுத்துள் அடங்கியுள்ள முழு உலகம்**
**என்றும் அன்பு காட்டி நிதம், வாழும் இது பாஎழுத்து**

"அன்னை போல ஓர்உயிர் அகிலத்திலும் கிடைத்திடுமோ?
அன்பு மட்டும் சூழ்ந்திருப்பாள் அன்னை இவள் தெய்வமல்லோ?
தாய்ப்பாசம் என்பதுவே அன்பினிலில் முதலடியே
தாயுள்ளம் போலவொரு திருக்கோயில் தான்உளதோ?

தன்பிள்ளை அழுதிடவே தன்உள்ளம் தான்கதறும்
தாயவளின் கண்களிலே வழியும்வெள்ளம் அன்பெனலாம்.
தன் உயிரில் சரிபாதி தான் கொடுத்தே ஒரு பிறவி
தந்தவளே தாய்அவள்தான் தன்மடியும் தந்திடுவாள்.

குஞ்சுகள் அழுதிடவே, தூரப்பறந்து இரைதேடி
ஊட்டிவிடும் சிறுபறவை கொண்டுள்ள அன்பு-நிதம்
தன் கன்று வந்திடவே பால்கொடுத்து சீராட்டும்
பசு இனங்கள் கொண்டுள்ள தாயன்பு இதுவல்லவோ?

குஞ்சுகளை பத்திரமாய், தன்சிறகுள் அடைகாக்கும்
கோழிதனின் நெஞ்சிலுள்ள தாய் அன்பு பார்த்திடுவீர்
வட்டமிடும் கழுகும் இதை பார்த்திட்டே மனம்திருந்தி
தன்கூடு சென்று தினம் சிந்தித்துப் பார்க்காதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிசெல்லும் பருவத்திலே பாலர்நாங்கள் அன்பு கொண்டு
பிற சிறார்கள் அன்பினிலே நண்பராக மாறோமோ?
அன்பு என்று தொடரும் இது நட்பாகப் பூக்காதோ?
நண்பர் என கூறிதினம் அன்பு செய்ய மாட்டோமோ?

தெருவோரம் படுத்திருக்கும் பூனை ஒன்றைக் கண்டு உன்
மனதில் தோன்றும் பாசம் அது அதிகரிக்கக் கூடாதோ
வீடுகொண்டு சென்று அதை அன்புடனே உணவூட்டி
விளையாடும் எண்ணம் உன் மனதினிலே தோன்றாதோ?

வயதுபோன பெற்றோரை அன்புடனே ஆதரித்து
உன்னருகில் வாழ்விக்கும் பிள்ளை மனம் கோயிலடா
தனை வளர்த்த பெற்றோரின் கண்ணில் வழியும் அன்புதனை
கண்டு உளம் குளிர்ந்திடவே அணைக்கும் பிள்ளை தெய்வமடா

உன்னிடம் கையேந்தும் ஒரு ஏழை தனைக் கண்டு
உன் உள்ளம் தனில் தோன்றும் உணர்ச்சியது அன்பல்லவோ
கணவனிடம் மனைவிகொண்ட அன்பு தான் வாழவைக்கும்!
இதை உணர்ந்து எல்லோரும் அன்பு செய்ய கற்றிடுங்கள்!

பிறரோடு பேசும்போது மனம் நிறைய அன்பு கொண்டு
இன்சொல்லது பேசிடவே அவர் உள்ளம் குளிருமடா!
அன்பென்னும் ஊற்றினிலே குளித்திடவே களித்திடவே
ஒரு ஜென்மம் போதாது மறு ஜென்மம் வேண்டுமடா!

தெய்வம் எமது உள்ளத்திலே ஊற்றி விட்ட ஊற்று இது
இதில் உள்ள அர்த்தம் உன் மூளைக்கு எட்டாதோ
பறவையிடத்தில் காணப்படும் அன்பு எனும் உயிரெழுத்து
ஆறறிவு படைத்தவனின் உள்நெஞ்சில் தோன்றாதோ?



மனிதவாழ்வில் அன்பென்னும் ஒரு தெய்வம் இல்லையெனின்
அவன்வாழ்வு இருளாக போய்விடும் பாராயோ!
கல்நெஞ்சம் படைத்தவனின் மனதினிலே ஒரு இரத்தத்
துளிகூட இருக்காது இது பெரியோர் கூற்றல்லவோ!

உன்சுவாசத்துள் மணக்கும் ஒரு வாசம் அன்பெனலாம்,
உள்நெஞ்சில் ஊற்றாய் பெருக்கெடுக்கும் அமுதெனலாம்
பிஞ்சுநெஞ்சம் தான்தொடங்கி பேதை உள்ளம் வரை படரும்
அன்பென்னும் ஒரு வடிவம் தெய்வம் என கூறிடலாம்.

ஓர் உள்ளம் தனில் அன்பு, என்பது இல்லையெனின்
இரு விழியில் கருமணிகள் இல்லாதது போலாகும்
ஒரு உயிரில் அன்பு எனும் பேருருவம் இல்லையெனின்
அருவுருவம் கொண்டு உனைஅழித்திடும் உன்நெஞ்சம்

தமிழ்மொழியில் முதலெழுத்தைக் கொண்டதொரு உணர்வு இது
உளமொழியில் ஒரு தேனாய் ஊற்றெடுக்கும் கலை இது
சிறு துரும்பும் அன்பு செய்யும் - மானிடா உன்நெஞ்சில்
அன்பெனும் ஓர்துரும்பு ஒருபோதும் வருவதுண்டோ.

பூவிதழில் தேன்போல, புல்வெளியில் பனிபோல
கண்களுள் கருவிழியாய், மெய்யதனில் உயிர் போல
தீபமதில் தீச்சுடராய் தீங்கனியில் தேன் போல
ஆத்மாவுள் பேரொளியாய் பாய்ந்து வரும் அன்பு இது.




S.Branavasoruby
Hindu Ladies College



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகவத்கீதை - வாழ்வின் தத்துவச் சுரபி



வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலே இந்து தர்மத்தின் இலட்சியக் கோட்பாடு. இத்தகையதொரு வாழ்வியல் நெறிக்கு தடைக்கற்களாய் முன்னிற்பவை பற்றும் சுயநலமும். லௌகீக பற்றைக் களையெடுக்க வேண்டுமானால் பரமாத்மா மீதான பற்றை சிக்கெனப் பற்றிக் கொள்ளவேண்டும். அப்போதுதான் ஜீவாத்மாவாகிய சிற்றுயிர்கள் நாம் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்.

இவ்வடிப்படையிலே இந்துத் திருநூல்களும், சாஸ்திரங்களும் காலத்துக்கு காலம் எழுந்துள்ளன. எனினும் அவை எழுந்த காலம், அவற்றின் சிந்தனைப் போக்குகள், போதனைகள், வெளிக்காட்டி நிற்கும் விடயங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன. உதாரணமாக உபநிடதங்கள் பரம்பொருள்-ஆத்மா இடையிலான ஆழ்ந்த தொடர்பை அறிவுபூர்வமாக ஆராய்கின்றன. பிற்காலத்தே எழுந்த பக்தி நூல்கள் இறைவனை அடையமுயலும் ஆன்மீகத் தேடலை உணர்வின் உயிராய் நுழைந்து விளக்கி நிற்கின்றன. ஆனால் இறைபற்றி, இறுகப்பற்றி வாழும் மனப்பாங்கை நடைமுறை வாழ்வியல் விழுமியங்கள் வாயிலாக செவ்வனே விளக்கி நிற்பது கீதையாகும்.

மகாபாரத மகாகாவியத்தில் பீஷ்ம பருவத்தின் பதினெட்டு அத்தியாயங்களில் அடங்கி மண்ணுலக வாழ்வை விண்ணுலக வாழ்வுடன் இணைக்கும் பாலமாய் விளங்கும் பெருமை பகவத்கீதைக்கு உண்டு. சமயம், தத்துவம் இரண்டையும் நடைமுறை வாழ்க்கையுள் அடக்கி விட்ட பெருமையும் கீதைக்கே உரியது. குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் பாசக்கட்டால் கோழையாகிவிட்ட பார்த்திபனுக்கு அவனது சுயதர்மத்தை அதாவது கடமையைச் செய் என கிருஷ்ண பகவான் உபதேசிப்பதாக கீதை விளங்குகிறது.



"மானிட சரீரமே போர்க்களம்". அதில் நல்ல உணர்வுகள் பாண்டவர்கள், தீய இயல்புகள் கௌரவர்கள். தீய சக்திகளுக்கு எதிராக நல்லுணர்வுகளைப் போராடத் தூண்டுகின்ற உந்துசக்தி கண்ணன். எந்தக் கட்டத்திலும் பிரச்சனைகளை எதிர் கொள்ளும் மனோதிடம் இல்லாதவனான மனிதன் அருச்சுனனாகி விடுகின்றான். இந்த வகையில் கீதை, வாழ்க்கையை காவியத்துடன் இணைத்து நோக்கும் ஒரு உருவகம் எனலாம்.

ஒருவன் சரியென்றும் தர்மமென்றும் ஏற்றுக்கொண்டவற்றை நிறைவேற்ற முயலும்போது பற்றும் பாசமும் குறுக்கிடுவது தவிர்க்க இயலாத ஒன்று. இக்குறுக்கீடுகளை தாண்டி கடமைகளை நிறைவேற்றுபவனே பூரண மனிதன் ஆகின்றான் என கீதை போதிக்கிறது. பல்வேறு முரண்பட்ட மனித மனங்களுக்கிடையே, ஒரு மனித மனத்திலேயே பல்வேறு முரண்பாடுகள் இருபகுதிகளாக நின்று மனிதனை இரு திசைகளுக்கு இழுக்கின்றன. ஒன்று தன்னலம் கருதும் திசை. மற்றது சமூகநலன் கருதும் திசை. இதில் எந்தத் திசையில் செல்வது என்பதில் குழப்பம் ஏற்படுகின்றது. பாரதத்தில் அருச்சுனன் நிலையும் அதுவே.

இரத்த பந்தங்களும் போற்றுதற்குரியவர்களும் முன் நிற்கையில் நான் அவர்களுக்கு எதிராகச் செயற்படலாமா என மனம் தத்தளிக்கிறது. அருச்சுனனுக்கு போர் ஒன்றும் புதிதல்ல. அத்தகையவனுக்கு ஏன் இந்தத் தடுமாற்றம்? தனது சொந்த வளர்ச்சியிலும் சொந்த ஆளுமைத் திறனிலும் பந்த பாசங்களை விட்டு மேலோங்கத் துடிக்கும் மனித மனம் பொது விடயம் என வரும்போது மட்டும் பந்தபாசங்களைக் காரணங் காட்டி தப்பிக்க முயல்கிறது. "உன் கடமையை நிறைவேற்றும் போது பந்தபாசங்களில் கோழையாகாதே" என்பதே கண்ணன் மானிட மனங்களுக்கு விட்டுச் சென்ற செய்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை, துன்பங்களும் சோதனைகளும் தொக்கி நிற்கும் குட்டை. துன்பத்துக்கு காரணம் அடுக்கடுக்காய் வரும் பிரச்சினைகள். பிரச்சனைக்கு அடிப்படை முரண்பாடு, முரண்பாட்டின் அத்திவாரம் தெளிவின்மை. தெளிவின்மைக்கு மூலகாரணம் பற்று. ஆகவே பற்றறு. அப்போது வாழ்க்கை சலனமற்ற தெளிந்த நீரோடையாகும் என கீதை கூறுகிறது. இதைப் பரிபூரண அறிவைப் போதிக்கும் சாக்கிய யோகம் நன்கு விளக்குகிறது.

ஜீவ பற்றில் கட்டுண்டு நீ கோழையாகி நிற்கின்றாய். கோழைத்தனம் நீங்க பற்றை விடு. நீ அழிப்பது உடலைத் தான், ஆன்மாவை அல்ல. ஆன்மா அழிக்கப்பட முடியாது. எனவே அழியக்கூடிய உடல் மீதுள்ள பற்றுக் காரணமாக, ஆன்மாவைத் திருப்தியடையச் செய்வதை நிறுத்தாதே. உன் கடமையைச் செய்யத் தவறாதே என பகவான் போதித்தார். இங்கு உடலுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பும் வேற்றுமையும் தெளிவாக விளக்கப்படுகிறது.

பற்றைக் களைத்து ஆசைகளை அடக்கி ஆன்மாவில் திருப்தி அடைபவன், புகழ்ச்சியில் பெருமையடையாது துன்பத்தில் மனம் சோராது ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் வீரனாகின்றான். இதுவே கீதை காட்டும் நிறைஞானியின் இலட்சணமாகும். இத்தகைய மனப்பாங்கு வாய்த்தால் வையத்தில் வாழ்வாங்கு வாழலாம். எனவே நடைமுறை வாழ்க்கையைத் தத்துவமாக்கித் தத்துவப் பிறப்பால் நடைமுறை வாழ்க்கையை நெறிப்படுத்தும் ஜீவசாரதியாக விளங்குவது ஸ்ரீமத் பகவத் கீதையே!

**சாமளை கனகசபாபதி**
முதலாம் வருடம்
மருத்துவ பீடம்




# உனக்குள் உறைந்திருக்கும் நிம்மதி

நிதமும் நிம்மதி தேடி அலையும் மானிடனே-நீ
காற்றில் கலந்து தேடினாய் கிடைக்கவில்லை
ஆழ்கடலில் அலைந்து தேடினாய் அடையவில்லை
கடவுளை தொழுது வேண்டினாய் முடியவில்லை

ஏழைப் பொழுதுகளில் உணவு கண்டால் நிம்மதி என்பாய்
வேளை உணவு கண்டால் பணமே நிம்மதி என்பாய்
சோலைப் பணம் கொண்டால் தொலைத்த உறக்கம் நிம்மதி என்பாய்
சில வேளை பாடை சென்றால் மட்டுமே நிம்மதி என்பாய்.

ஒருகணம் உன்மனதை உற்றுப்பார்-அதில்
ஊற்றெடுக்கும் உண்மைகளைக் கேட்டுப்பார்
நீ தொலைத்தவற்றை அங்கே தேடிப்பார்
தடைகளை கண்டு அதை களைந்து பார்.

சுயநலத்தை சுட்டெரித்து விடு
கெட்ட சிந்தனைக்கு தீயிட்டு விடு
இறைசிந்தனை உள்ளத்தில் இட்டுவிடு-அங்கே
நிம்மதியின் சிகரத்தை தொட்டுவிடு



**ஸ்ரீ. கார்த்திகன்**
முதலாம் வருடம்
முகாமைத்துவ பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கிராமிய தெய்வ வழிபாட்டில் ஐயனார்

### கிராமியத் தெய்வங்கள்

இலங்கையில் கிராமியத் தெய்வங்களாக பிள்ளையார், சுப்பிரமணியர், ஐயனார், வீரபத்திரர், காளி, பைரவர், நாகதம்பிரான், வல்லியப்பர், பிடாரி அம்மன், பேச்சிஅம்மன், நாச்சிமார், முனியப்பர், கண்ணகி, திரௌபதி, கருப்பன்சாமி, மாடசாமி போன்ற தெய்வங்கள் போற்றி வழிபடப்படுகின்றன. இவ்வழிபாடு ஈழத்தின் வடக்கு கிழக்கு, மலையகம் மட்டுமன்றி பெரும்பாலான சிங்களப் பிரதேசங்களிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தெய்வ வழிபாடுகள் பொதுவாக ஆகமநெறிசாராத நெறியில் நடத்தப்படும் வழிபாடாக காணப்படுகின்றது. இருப்பினும் நகர மயமாகும் வாழ்க்கையில் தற்போது இவ்வாறான ஆலயங்கள் சிலவும் புனருத்தானம் செய்யப்பட்டு ஆகம நெறிகளுடன் கூடிய வழிபாடுகள் இயற்றப்படுகின்றன. இந்நிலையில் ஈழத்தில் ஐயனார் என்கின்ற தெய்வமும் பிரசித்திபெற்ற கிராமியத் தெய்வமாக போற்றி வழிபடப்படுகின்றது.

### ஐயனாரின் வகைகள்

ஐயனார் என்கின்ற தெய்வம் அல்லது கிராமியத்தெய்வம் பற்றிய தெளிவு நம்மிடத்து ஏற்படுத்தப்படவேண்டும். ஏனெனில் எமது அறுவகை சமயத்திலும் அடங்காத ஒரு கடவுளாக ஐயனார் சித்தரிக்கப்படுகின்றார். சைவம், வைணவம் ஆகிய இரு மார்க்கங்களுக்கும் தொடர்பை ஏற்படுத்தும் தெய்வமாக ஐயனார் விளங்குகின்றார். அதனால் இவ்வழிபாடு பல இடங்களிலும் இடம்பெறுகிறது. ஆனால் பிரதேசத்திற்கு பிரதேசம் வழிபடப்படும் ஐயனாருக்கும், ஐயனார் வழிபாட்டுக்கும் இடையில் பல வேற்றுமைகள் காணப்படுகின்றன.



யார் இந்த ஐயனார்? கிராமங்களில் இந்த ஐயனார் காவல் தெய்வமாக வணங்கப்படுகின்றார். இதிகாச புராணங்களில் சிவனுக்கும் விஷ்ணுவிற்கும் பிறந்த தர்மம் காக்கும் தர்ம சாஸ்தாவாக சித்தரிக்கப்படுகின்றார். இந்த 'சாஸ்தா' வையே சாத்தப்பன் எனும் கிராம தெய்வமாக வணங்குகின்றனர். தவிரவும் அவதார புருஷரான ஐயப்பனும் ஐயனாரின் அம்சமாக கருதப்படுகின்றார்.

### 1. ஐயப்பன்

ஐயனாரின் (சாஸ்தா) அவதாரமே ஐயப்பன் எனக் கூறப்படுகின்றது. விஷ்ணு எவ்வாறு யுகங்கள் தோறும் அவதாரம் எடுத்து தர்மத்தை நிலை நாட்டுகின்றாரோ அதே போன்றுதான் தர்மபிரபுவான ஹரிஹரபுத்ர மகாசாஸ்தா என்கிற ஐயனார் மணிகண்டனாக கேரளத்தில் அவதரித்து தர்மத்தை நிலைநாட்டி ஐயப்பனாக சபரிமலையில் அருள் செய்கிறார். அந்த மணிகண்டனையே ஐயப்பன் என அழைக்கின்றோம். இவ் ஐயப்பன் வழிபாடு இந்தியா, இலங்கையிலும் புலம்பெயர் வெளிநாடுகளிலும் தற்போது காணப்படுகின்றது. ஐயப்பன் பத்மாசனத்தில் சின் முத்திரையுடன் பிரம்மச்சாரியாக காட்சியளிப்பார்.

### 2. கிராமத்து ஐயனார்

குதிரைமீது வீற்றிருக்கும் இந்த ஐயனார் கிராமங்களில் காவல் தெய்வமாக பயபக்தியுடன் வணங்கப்படுகின்றார். இவர் மீசையுடன் கூடிய தோற்றத்துடன் கையில் அரிவாள் ஏந்தியவாறு வெள்ளை அல்லது சிவப்பு நிற குதிரையில் அமர்ந்து ஊரைக்காக்கும் காவல் தெய்வமாக விளங்குகின்றார். இவ்வாறான வழிபாடு பெரும்பாலும் இந்திய கிராமங்களில் இடம்பெறுகின்றன. அதே வழிபாட்டை மலையக மக்களும் இங்கு கடைப்பிடிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் (சாஸ்தா)

இந்த ஐயனார் வழிபாட்டின் தொன்மை என்று பார்க்கும் போது தசாவதாரத்தில் வரும் பரசுராமரே இவ் ஐயனார் வழிபாட்டை தொடங்கி வைத்ததாகக் கூறப்படுகிறது. இவர் 18 ஆலயங்கள் அமைத்து இவ்வழிபாட்டை நடாத்தியதாக கருதப்படுகின்றது. இந்த ஐயனார் சிவனுக்கும் விஸ்ணுவின் மோகினி அவதாரத்திற்கும் கையில் உதித்தவர் என்பதால் கையனார் என போற்றப்பட்டார். இவர் பிள்ளையார், முருகனின் சகோதரனாக வர்ணிக்கப்படுகின்றார்.

இவரது வாகனம் வெள்ளை யானையாகும். சின் முத்திரையுடன் கூடிய ஏகபாத பத்மாசனத்தில் ஐயனார் வீற்றிருந்து காட்சி கொடுப்பார். விஸ்ணுவின் மகன் ஆகையால் நாமம் இட்டு நீல வஸ்திரம் அணிந்து நீல நிறக் கடவுளாக சித்தரிக்கப்படுகின்றார். இவ் ஐயனார் வழிபாடு இந்தியாவிலும் இலங்கையிலும் பிரதானமாக விளங்குகின்றது. சமய ஆய்வாளர்கள் தர்ம சாஸ்தாவான ஐயனாரையும் அறத்தை முன்னிலைப்படுத்திய கௌதம புத்தரையும் ஒன்றென ஒப்புநோக்கும் கருத்தையும் இங்கு குறிப்பிடலாம்.

### இலங்கையில் ஐயனார் வழிபாடு

மேலே கூறியது போல் பலதரப்பட்ட ஐயனார் வழிபாடுகள் ஈழத்தில் நடைபெறுகின்றன. சிறிய கோவில்கள், பெரிய சிலைகள் என்பன இக்கிராமிய வழிபாட்டில் இடம்பெறும். பெரும்பாலும் இங்கு மடை, குளிர்த்தி, பொங்கல், பூசை என்பன இடம்பெறும் தவிர நேர்த்திக்கடன், காணிக்கை, வருச பெருநாள் விழாக்கள் என்பனவும் இடம்பெறும். அதேபோல் பௌத்த சிங்கள மக்களும் தமது வீடுகளிலும், வழிபாட்டுத்தலங்களிலும் 'ஐய்யனார் தெய்யோ' என்கிற தெய்வவழிபாட்டை மலர் கொண்டு நடாத்துகின்றனர். இங்கும் மடை, காணிக்கை என்பன நடைபெறும். காவல் ஐயனார் பொதுவாக ஊரின் தொடக்கத் திலும், எல்லைகளிலும், மத்தியிலும் காவல் தெய்வமாக பெரிய அளவில் பொம்மையாக வைத்து வழிபடப்படுகின்றார்.

### ஐயப்பன் வழிபாடு

இலங்கையில் ஐயப்பன் வழிபாடு மிகப்பிந்தியதே ஏன் எனில் இங்கு ஐயனார் வழிபாடே பிரதானமாக இருந்தது எனலாம். இந்திய திருத்தல யாத்திரைகளின் பலனாகவே இவை இங்கு தோற்றம் பெறலாயின. ஐயப்பன் 18 படிகளுடன் கூடிய ஆலயத்தில் அமர்ந்து அருள் பாலிக்கிறார். இவ்வழிபாடு கிராமிய வழிபாட்டு நெறியிலிருந்தும் ஆகம விதியினின்றும் விலகி சபரிமலை ஐயப்பன் ஆலயத்தில் இடம்பெறும் கிரியை நெறி சார்ந்தே இங்கு பெரும்பாலும் நடாத்தப்படுகின்றது. இவ் வழிபாட்டில் கார்த்திகை மாத மண்டல பூஜை, மகரஜோதி என்பன முக்கியமானவை. இவ்வழிபாடு இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம் உட்பட பல பிரதேசங்களிலும் பரவிக் காணப்படுகின்றது. ஈழத்தில் சபரிமலை யாத்திரிகர்களின் அதிகரிப்பால் இவ் ஐயப்பன் வழிபாடு அதிகரித்துச் செல்கின்றது என்றால் அது மிகையில்லை.

இனமத வேறுபாடுகளின்றி ஐயனார் வழிபாடு ஈழத்தில் பின்பற்றப்படுகின்றது. தவிரவும் கிராமிய தெய்வ வழிபாடான இஃது, நேர்த்தி, குளிர்த்தி, தீமிதிப்பு, பொங்கல், மடை போன்ற அம்சங்களுடன் கூடிய வழிபாட்டு முறையை பின்பற்றும் அதேவேளை மிருக பலியை முற்றாக தவிர்த்துமிருப்பது ஒரு வரவேற்கப்பட வேண்டிய அம்சம். தவிரவும் நகரமயமாகிவரும் இக்கால கட்டத்தில் கிராமிய வழிபாடுகளை உரிய முறையில் பின்பற்றி எமது சமய பண்பாட்டு அம்சங்களை பேணிப் பாதுகாப்போமாக!

**க. குமரன்**
கலைப்பீடம்
முதலாம் வருடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்கள் புள்ளிகளாலானவை

உலகமும் வாழ்க்கையும் புள்ளிகளாலானவை
சரியான புள்ளிகளை இணைப்பவர்கள் வெற்றிபெறுகின்றனர்
நான் தவறாக இணைத்தாலும் அதற்குள்
எனது உலகத்தையும் வாழ்க்கையையும் சிருஷ்டித்துக்கொண்டேன்

என்னுடைய எண்ணங்கள் புள்ளிகளாலானவை
நான் என்னுடைய இரவுகளையும் பகல்களையும்
புள்ளிகளாகவே உணர்ந்து கொள்கிறேன்
இயற்கையையும் அன்பையும் காதலையும் புள்ளிகளாகவே
நுகர்ந்து கொள்கிறேன்

நான் என்னுடைய ஒவ்வொரு கணப்பொழுதுகளையும் புள்ளிகளாக
அனுபவிக்கிறேன்
எனது வெளிப்பாடுகளும் அப்படித்தான்
நான் கொட்டிச்சிந்திய புள்ளிகளை புரிந்து கொள்ள முடியாதவர்கள்
தாமாக என்னை விட்டு விலகி நடந்தனர்.

நான் புன்னகைப்பதும் புள்ளிகளாகத்தான் ...
புள்ளிகளை தவறாக பொருத்திவிட்டதில்
என்னுடைய காதலி விலகிச்சென்றாள் ...
நான் புள்ளிகளின் முழுநேரக்காதலனானேன்
என்னுடைய கனவுகளும் புள்ளிகளே

என்னுடைய புள்ளிகளை பைத்தியக்காரத்தனம் என்றதில்
சில நண்பர்களையும் தவிர்த்தேன்
இன்னமும் புள்ளிகளை அள்ளித்தெளித்துக் கொண்டே நடக்கிறேன்
என்பின்னால் இன்னமும் சிலர் வருவதையிட்டு

நான் தேடிப்போகும் உலகமும் புள்ளிகளானது
புள்ளிகள் அழகானவை ...
நீங்கள் ஒரு வேளை உங்கள் வீட்டு சுவரை
மாசுபடுத்தும் மறுவாக அதை உணர்ந்திருக்கலாம்.



அல்லது
உங்கள் அழகான வெண் சட்டையில் ஒட்டிக்கொண்ட
தூசியாக கண்டிருக்கலாம் ...

நான் அப்படியல்ல
தனித்த இரவுகளில் விலகிச்சென்றாலும் அவளையே
நினைவுபடுத்தும்
அவளது கருவிழிகளாக உணர்ந்தேன்
வெறுமையாக உணரும் போது
வெறுமை தவிர்க்க வென அவள் நெற்றியில் இட்டுவந்த
கருநிற சாந்துப்பொட்டாக எண்ணிக்கொள்வேன்

இப்படியும் கூட எண்ணுவதுண்டு
நீலவானம் சிதறிப்போன ஒளிப்புள்ளிகளால் ஆனது
நட்சத்திரங்கள் சிதறிக்கிடக்கும் புள்ளிகளே ...
நட்சத்திரங்களிடைப்பட்ட கறுப்புப்புள்ளிதான் வானம்.

என்னுடைய மூடிவைக்கப்பட்ட ஒவ்வொரு மௌனங்களும் வெடித்து
புள்ளிகளாக கவிதைகள் பிரசவிக்கப்படுகின்றன.

எவ்வளவுதான் சலித்தாலும் எல்லாவற்றையும் புள்ளிகளாகத்தான்
முயன்றுகொண்டிருக்கின்றேன்.
அவள் விலகிப்போனதால் சிதறி புள்ளிகளான இதயத்துடன்.

**செ.மதுரகன்**
முதலாம் வருடம்
மருத்துவ பீடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியபிரிவு சிறுகதைப் போட்டியில்
முதலிடம் பெற்ற சிறுகதை

# நினைவுகள்

"டாக்டர் இங்க பாருங்க. இந்தச்சின்னப்பிள்ள மருந்த சாப்பிடமாட்டுதாம்!" வைத்தியசாலைக் கட்டிடத்தில் தாதியொருவர் வாய்வழிவந்த சிறு சினம் கொண்ட வார்த்தைகள் இவை. "சீ!சீ சின்னப்பிள்ளைகளிட்ட என்ன அதட்டல். இங்க தாரும். நான் மாத்திரைகளை குடுக்கிறன்" என்ற அந்த பெண்வைத்தியர், குழந்தையிடம் பண்பாய் கொடுத்த மாத்திரைகள். அவள் வாழ்வின் திருப்புமுனையை ஞாபகமூட்டி வருத்தின. "நல்ல பிள்ளையல்லா? சின்னப் பிள்ளையல்லா! இதை சாப்பிடுக்களன் அக்கா நான் சொகலட் வாங்கித்தருவேன்" என்ற இவளின் வார்த்தைகள் குழந்தையின் மனதைமாற்றி ஒப்புக்கொள்ள வைத்ததோ, அல்லது உறவென எண்ணி ஒருவருக்குதவும் மனநிலையின் பண்பு உருக வைத்ததோ, அந்தப்பண்பே அவனின் அன்றைய மனவேதனை யையும் இவளின் இன்றைய மனவேதனைகளுக்கும் காரணங் களாகின. "குட் போய் உங்கட பேர் என்ன?" இந்தகேள்வியின் பதில்தான்அவள் கடந்துவந்த பாதையிலிருந்த முள்ளாய் அவள் உள்ளத்தில் குத்தியது. "என்ர பேர் சந்தோஷ்" அந்த விடியலைக்கண்ட மலர்கள் மலர்ந்திருக் கலாம்;ஆனால் இவளுள்ளம் அந்தநொடியிலிருந்து வாடிக் கொண்டது. கண்ணில் நீர்த்துளிகள் வெம்பி வரினும் அவள் முகம் அதைக்காட்டிக் கொடுக்கவில்லை. அவ்விடத்தை விட்டு நீங்க எண்ணி அவள் அந்தச்சின்னப்பையனினை தழுவி முத்தமிட்டு விட்டு வெளியேறினாள். மெதுவாக அவளின் நடை இருப்பினும், மிகவேகமானதாய் அவள் கண்ணீர்த்துளிகள் வரஎண்ணின. தன்னுடைய அறையை அடைந்த அவளின் கண்களின் நீர்க்கோலம் வெளியுலகினை காணஎண்ணி சொரியத்தொடங்கின. தன்னைத் தானே வருத்திக்கொள்ளும் வகையில் கைகள் மேசையில் தாளம் தட்டின. தாளத்தின் நிறைவாய் அவள் மேசையில் சிரம் சாய்த்து தன் வாழ்வின் பலவருடங்களை பின்னோக்கி மீட்டினாள்.

பல்கலைக்கழகம் தன் வாழ்வில் பொறியியலாளராக வேண்டுமென்று எண்ணியவனாய் மூன்று "A" சித்திகளுடன் பல்கலைக்கழகம் நுழைந்தவன் சந்தோஷ். வைத்தியராகி பலருக்கும் பலசேவை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் பெற்றோரின் கனவுகளை நினைவுகளாக, நிஜங்களாக மாற்ற பல்கலைக் கழகத்திற்குள் நுழைந்தவள் கவிதா. வீட்டில் ஒரே பிள்ளை என்பதால் நல்ல செல்லமாக வாழ்ந்தவள். வைத்தியராவதை விட்டு எந்த எண்ணமும் அற்றவள் இவள். கவிதாவின் பிறருக்குதவும் பண்பும், பரதநாட்டியத்தில் சிறந்த தகைமையும், திறமையும், நேர்மையும் சந்தோஷ் இவள் மீது காதல் கொள்ளத் தூண்டியது. இவளைப் போன்ற ஒருத்தியே என் வாழ்விற்கு துணையாக வரவேண்டும் என இவன் மனதிலிட்ட விதை காலப்போக்கில் செடியாய் வளர்ந்து மலர்களாய் மலர்ந்து கனிகளாய் மாறி ஆழமாய் வேரூன்றிக்கொண்டது. இத்தகைய எண்ணத்தினை அறிந்திராத இவள், சந்தோஷுடன் நட்புடன் பழகினாள்.

மலரை இறைவனுக்காய் ஒருமுறை கொய்வதைப்போன்றே இவன் மனதிலெழுந்த காதலைக்கூற மலருடன் அவளைநோக்கி சென்றான். தன் காதலையும் உரைத்தான். அந்தமலரிலிருந்த வாசனை கவிதாவால் நுகரப்படவில்லை, மாறாக நிராகரிக்கப் பட்டது. "நீ தான் என் உயிர் உன்னை நீங்கின் நான் உயிர் வாழமாட்டேன்" என்ற அவனின் வரிகள் இவளுக்கு காவியமாக தெரியவில்லை. காற்றில் எறியப்பட்ட வார்த்தைகள் என எண்ணிய கவிதா "காதல் என்ற சொல்லிற்கே என் மனதில் இடமில்லை" என்று திடமாகக் கூறினாள். காலில் அவன் வீழ்ந்தான். "காதல் என்பது பிச்சையல்ல, அது புனிதமானது, அதை கொச்சைப்படுத்தாதே! நான் உன்னை எத்தருணத்திலும் காதலிக்கமாட்டேன்" என்று உறுதிதழும்ப வாயால் கூறினாள். அவளின் மனதை மாற்ற இயலாது என உணர்ந்து கொண்டான் சந்தோஷ்.

மறுநாள் பல்கலைக்கழக வளாகம் முழுதும் பரபரப்பு. அப்போதுதான் அவன் தற்கொலை செய்ததை அறிந்தாள். அவன் ஒரு அநாதை என்று தெரிந்த அவள், தன் உள்ளத்தினை கிழித்து கண்ணீர் துளிகளை பொழியச் செய்தாள். அவன் இவளை விட்டு நீங்கிபின்னர் இவள் அவன் அன்பை புரிந்துகொண்டாள். உணர்ந்துகொண்டாள், மதிப்பையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தாள். ஆனால் மாண்டவர் மீண்டும் வருவதுண்டோ இம்மாநிலத்தில் இரண்டு வாரங்களின் பின் இவள் கைகளில் கடிதம் ஒன்று வந்தது. அதில் எழுதப்பட்டது 2 வரிகள்தான். ஆனால் அவ்வரிகள் இவளை ஆயிரம் அம்புகளால் குத்திக்கொண்டன. "நான் உன் நண்பனல்ல, காதலனல்ல, கணவன். உன், நீ விரும்பும் வைத்தியத்தொழிலில் உன் கணவனாய் நான்" இந்த வரிகளின் ஆழமான அர்த்தத்தினை அவள் புரிந்து கொண்டாள். அவள் உயிர் நீங்கும் வரை அவளுடன் இரண்டறக்கலந்திருப்பவனாக இவன் இருப்பான் என்பதையே.

ஆண்டுகள் காலச்சக்கரச்சுழற்சியால் கழிந்தன. வயது முப்பத்திரண்டு. திருமணம் புரியாத நிலை. அவனை ஏற்கமறுத்த இவளின் உள்ளம் வேறுயாரையும் ஏற்கவில்லை. தன் தாலியாக ரெசஸ்கோப்பை பாவனை செய்து கொண்டு வாழ்ந்து வருகிறாள் இவள். ஒரு பொருளின் அருமை அது அருகில் இருக்கையில் தெரியாதென்பது இவளது விடயத்தில் சரியாகிவிட்டது. என்றாவது அந்த நினைவலைகள் அவள் மனதில் அலைமோதும். ஆனால் அவன் இறக்கவில்லை. அவன் உணர்வுகளுடன் வாழ்கின்றேன் என எண்ணி வாயோரத்தில் புன்னகை பூக்கசெய்து பழைய நிலையை அடைந்து கொள்வாள்.

இவளுடன் இரண்டறங்கலந்தவை அவன் நினைவுகளல்ல;
அவனின்
உணர்வுகளுமல்ல;
நிஜங்களென அவளால் எண்ணப்படுகின்ற
நினைவுகள்;

நீங்காத அவள் நினைவுகளை
பேனாமுனையில் வடித்த
நிழலாய் நான்.

Sivaharanee Varatharajah
C/Ramanathan H.L.C.

# நவராத்திரி விழா 2006







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தாள். ஆனால் மாண்டவர் மீண்டும் வருவதுண்டோ இம்மாநிலத்தில் இரண்டு வாரங்களின் பின் இவள் கைகளில் கடிதம் ஒன்று வந்தது. அதில் எழுதப்பட்டது 2 வரிகள்தான். ஆனால் அவ்வரிகள் இவளை ஆயிரம் அம்புகளால் குத்திக்கொண்டன. "நான் உன் நண்பனல்ல, காதலனல்ல, கணவன். உன், நீ விரும்பும் வைத்தியத்தொழிலில் உன் கணவனாய் நான்" இந்த வரிகளின் ஆழமான அர்த்தத்தினை அவள் புரிந்து கொண்டாள். அவள் உயிர் நீங்கும் வரை அவளுடன் இரண்டறக்கலந்திருப்பவனாக இவன் இருப்பான் என்பதையே.

ஆண்டுகள் காலச்சக்கரச்சுழற்சியால் கழிந்தன. வயது முப்பத்திரண்டு. திருமணம் புரியாத நிலை. அவனை ஏற்கமறுத்த இவளின் உள்ளம் வேறுயாரையும் ஏற்கவில்லை. தன் தாலியாக ரெசஸ்கோப்பை பாவனை செய்து கொண்டு வாழ்ந்து வருகிறாள் இவள். ஒரு பொருளின் அருமை அது அருகில் இருக்கையில் தெரியாதென்பது இவளது விடயத்தில் சரியாகிவிட்டது. என்றாவது அந்த நினைவலைகள் அவள் மனதில் அலைமோதும். ஆனால் அவன் இறக்கவில்லை. அவன் உணர்வுகளுடன் வாழ்கின்றேன் என எண்ணி வாயோரத்தில் புன்னகை பூக்கசெய்து பழைய நிலையை அடைந்து கொள்வாள்.

இவளுடன் இரண்டறங்கலந்தவை அவன் நினைவுகளல்ல;
அவனின்
உணர்வுகளுமல்ல;
நிஜங்களென அவளால் எண்ணப்படுகின்ற
நினைவுகள்;


நீங்காத அவள் நினைவுகளை
பேனாமுனையில் வடித்த
நிழலாய் நான்.

Sivaharanee Varatharajah
C/Ramanathan H.L.C.



# நவராத்திரி விழா 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் விழா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொங்கல் விளையாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேஸ்வர தலயாத்திரை





முன்னேஸ்வர தலயாத்திரை புறப்படும் முன்னர்



முன்னேஸ்வர மடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சமய திறன்காண் போட்டிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமய திறன்காண் போட்டிகள் ஒழுங்கமைப்புக் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசர் தேவாரத்தில் பழமொழிகள்

பக்தி இயக்கப் படைப்பாளிகள் ஏனைய படைப்பாளிகளைப் போன்று தமது படைப்பில் எளிதில் நிறைவு கொள்வதில்லை. தாம் சார்ந்துள்ள சமயக் கருத்தியலை மக்களிடத்தில் கொண்டு சேர்ப்பதே அவர்களுடைய முதல் நோக்கமாகும். அதற்காக அவர்கள் மேற்கொண்ட உத்திகள் பல!

முதலாவதாக பயணம் அவர்களை, மக்கள் முன் அவர்கள் சார்ந்துள்ள கருத்தியலின் தூதுவர்களாக நிறுத்தி வைத்தது. இரண்டாவதாக இசை, அவர்கள் கைக்கொண்ட இசை வடிவங்கள் மக்களை அவர்கள் முன் நிறுத்திவைத்தன. மூன்றாவதாக அவர்கள் பேசிய, பாடிய மொழி மக்களின் பேச்சு நடையை ஒத்ததாக இருந்தது. பக்தி இயக்கப் பாடல்கள் நெகிழ்வான மொழி நடையை உடையன. பேச்சு மொழியின் அடிக்கூறுகளான வழக்குச் சொற்கள், சொல்லடைகள், பழமொழிகள், ஒலிக்குறிப்புச் சொற்கள் ஆகியவை கலந்த ஒரு மொழி நடையினையே தேவார மூவரும் ஆழ்வார்களும் பயன்படுத்தி உள்ளனர். திருநின்ற செம்மையரான திருநாவுக்கரசர், தாம் வாழ்ந்த காலத்தில் சமயத்தையும் பண்பாட்டையும் சமூகத்தையும் மீட்டுருவாக்கம் செய்யும் அரிய முயற்சியில் ஆழ்ந்திருந்தார். நாட்டுப்புற வழக்குகள் பல அவரது தேவாரப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் பழமொழிகளும் உண்டு.

வாழ்க்கை அனுபவங்களின் பிழிவாகக் காணப்படுபவை பழமொழிகளாகும். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றறியும் மனித வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பலவிதமான அனுபவங்களை பெறுகின்றனர். அவற்றுள் சில மகிழ்ச்சிக்குரியன, சில வருத்தத்திற் குரியன, சில நினைத்து சுவைக்கத்தக்கன, மேலும் சில மறந்து விடத்தக்கன. அனுபவம் எதுவாயினும் அதனுடைய சாரத்தை தனக்குப் பின் வருவோர் உணருமாறு மனிதன் கூறியவையே பழமொழிகள் எனலாம். பழமொழிகளை கொண்டு மக்களின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் அறியலாம் எனக் கலைக்களஞ்சியம் கூறும். பழமொழி, பழஞ்சொல், முதுமொழி, முதுசொல், வசனம், சொல்வம், சொல்வடை என்று பலவாறான பெயர்கள் பழமொழிக்கு இருப்பதுவே அதன் தொன்மையை விளக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமொழிகளின் அருமையை உணர்ந்த முன்னோர் அவற்றை ஏட்டில் எழுதா நாட்டுப்புற இலக்கிய நிலையிலிருந்து மாற்றிப்பதிவு செய்ய எண்ணியதன் விளைவே, "பழமொழி நானூறு" என்னும் இலக்கியமாகும். திருக்குறள், நாலடியார் முதலான நூல்களிலும் பழமொழிகள் இடம்பெறுவதனை காணமுடிகின்றது. தொடர்ந்து எழுந்த பக்தி இலக்கியங்களிலும் பழமொழிகள் குறிப்பிட்டதோர் இடத்தை பெற்றுள்ளன.

மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, விரும்பப்பட்டு, அன்றாட வாழ்க்கையில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு பயன் படுத்தப்படல் பழமொழியின் இன்றியமையாத இயல்புகளில் ஒன்று. பழமொழி உரைநடை சார்ந்தது எனினும் கவிதைக்குரிய எதுகை, மோனை, முரண் தொடை போன்ற ஒலிநயங்களை காணலாம். பழமொழி உவமைப்பண்பு கொண்டது. சில பழமொழிகள் சில கதைகளை பிழிந்தெடுத்த சாறுபோல் அமைகின்றன. 'குறைந்த பட்சம் ஒரு தலைப்பையும் ஒரு முடிவுரையையும் உள்ளடக்கிய மரபுவழி உரைக்கூற்றே பழமொழியாகும்' எனவும் பழமொழிகளை வரையறுக்கலாம். அமைப்பியல் அடிப்படையில் பழமொழி வகைகளுள் "வேறுபடுத்திக் காட்டும் முரணுடைய பழமொழிகள்" என்பதும் ஒன்று. திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்பெறும் பழமொழிகளுள் பெரும்பாலானவை மேற்கூறிய இயல்புகளுக்கு பொருந்தி வருவனவாகும்.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் ஒரு பதிகம் முழுவதிலும், ஒவ்வொரு திருப்பாடலிலும் பழமொழி அல்லது சொல்லடை வருமாறு அமைந்துள்ளது. வேறுபல பாடல்களிலும் பழமொழிகள் பயின்று வருவதை காணமுடிகின்றது.

திருப்பாடல் தோறும் ஒரு பழமொழி அமையப்பெற்றதனால் நான்காம் திருமுறையிலுள்ள ஐந்தாம் பதிகம் பழமொழிப்பதிகம் என்றே அழைக்கப்படுகின்றது. இப்பதிகப்பாடல் ஒவ்வொன்றிலும் ஈற்றடியில் ஒரு பழமொழியோ, சொல்லடையோ இடம்பெறுகின்றன. இவற்றுள் சில இன்றளவும் மக்கள் வழக்கில் உள்ளவை.



"மெய்யெலாம் வெண்று சண்ணித்த
மேனியான் தாழ் தொழாதே
உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி
உழிதந்தென் உள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலை குயில் கூவ
மயில் ஆலும் ஆரூரரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருக்க
காய் கவர்ந்த கள்வனேனே"

என்பது இப்பதிகத்தில் உள்ள முதற்பாடல் "கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" என்னும் குறள் வரியை இப்பாடல் நினைவுபடுத்துகின்றது. ஏய்த்தவாறே.." என்றும் பழமொழியும் இதே கருத்தை கூறும். சைவ சமயத்தை விட்டுப் பிரிந்து, சமணம் சார்ந்து பல்லாண்டுகள் கழித்து மீண்டும் சைவம் திரும்பியவர் திருநாவுக்கரசர். சமணத்தில் புகுந்ததால் இழிநிலை ஏற்பட்டதாக கருதி, சைவத்தின் மேன்மையை உணர்த்தும் விதமாக இப்பதிகப் பழமொழிகள் அமைந்துள்ளன.

இரண்டாம் பாடலில் அமையும் பழமொழி, "முயல்விட்டுக் காக்கை பின் போனவாறே..." என்பதாகும். முயலின் பின்போதல் எளிது, காக்கையின் பின்போதல் பறத்தல் இயல்பில்லாத மனிதர்க்கு அரிது. தமக்கு இயல்பல்லாத சமண நெறியில் சென்ற இழிநிலை இப்பாடலில் அப்பரால் கூறப்படுகின்றது. 'இருப்பதை விட்டு பறப்பதை பிடிக்கப் போவது' என்னும் உலக வழக்குப் பழமொழியை மேற்கண்ட பழமொழிகள் ஒத்துள்ளதை காணலாம்.

"அறம் இருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே.." என்னும் பழமொழி மூன்றாம் பாடலில் அமைகின்றது.

"நல்லவனை நாலு பணம் கொடுத்து வாங்கு
கெட்டவனை நாலு பணம் கொடுத்து விலக்கு"

என்று ஒரு பழமொழி கூறுகின்றது. இதன் மறுதலையாய் விலை கொடுத்து மறம் வாங்குவது எத்தனை பேதமை என்பதனை இப்பாடல் வரி விளக்குகின்றது. "தவம் இருக்க அவம் செய்து தருக்கினேனே" என்னும் ஒன்பதாம் பாடற் கருத்தும் இதுவேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணல் வீடு கட்டுவது, நீர்க்கோலம் போடுவது போன்ற நிலையற்ற செயல்களை செய்வது அறிவிலிகள் செயல் ஆகும். இதனை தாம் செய்ததாக அறிவிக்கும் அப்பரடிகள் கீழ்க்காணும் தொடரை கூறுகின்றார்.

"பனி நீரால் பாவை செயப்பாவித்தேனே"

சமண நெறியால் வீடுபேறு அடையக் கருதுதல் அறிவீனமாகும் என்னும் கருத்தை இப்பாடல் வரி கொண்டுள்ளது.

அறிவிலியோடு சேர்ந்தால் அழிவு உறுதி என்னும் கருத்து அடுத்த பாடல் பழமொழியில் பெறப்படுகிறது.

"எதன் போர்க்கு ஆதனாய் அகப்பட்டேனே"

என்னும் இப்பாடல் வரி "பின் இன்னா பேதையார் நட்பு" என்னும் பழமொழி நானூற்று கருத்துக்கு ஒத்திசைக்கின்றது.

கொண்ட கொள்கையின் தன்மை அறியாமல், கண்மூடித்தனமாய் பின்பற்றும் முட்டாள் தனத்தை,

"இருட்டு அறையில் மலடு கறந்து எய்த்தவாறே"
என்னும் பாடல் பழமொழி எடுத்தியம்புகின்றது.

பயனற்ற செயலை செய்து ஓய்ந்து போகும் செயற்பாடு மனிதனிடம் இன்றளவும் உள்ளது."விழலுக்கு இறைத்த நீர்" என்னும் தொடர் அதனை உணர்த்தும். இக்கருத்து அமைய, அப்பரடிகள் "பாழ் ஊரிற் பயிக்கம்புக்கு எய்த்தவாறே.." என்னும் சொல்லடையை தமது அடுத்த பாடலில் கூறுகின்றார். (பயிக்கம்=பிச்சை). இதே கருத்தினை "பயிர்தன்னை அழிய விட்டு பாழ்க்கு நீரிறைத்து." என்று மற்றொரு பாடலிலும் அமைத்து பாடுகின்றார்.

வழி தெரிந்தவன் வழி தெரியாதவனுக்கு வழிகாட்டுதல் உலக இயல்பு. மாறாக "கொத்தைக்கு மூங்கை வழிகாட்டும்" போக்கினை பற்றி கூறுகின்றார் அப்பரடிகள். (கொத்தை=குருடன், மூங்கை =ஊமை)

நாட்டுப்புற வழக்காறுகளிலும் பழமொழிகளிலும் காணப்படுகின்ற, "விளக்கினில் விழும் விட்டில் பூச்சி" யையும், "ஆற்றினில் கெடுத்து குளத்தினில் தேடிய ஆதர்" ஐயும், "இருதலை மின்னுகின்ற கொள்ளி மேல் எறும்பு" ஐயும், "பாம்பின் வாய்த் தேரை" ஐயும் தமது திருப்பாடல்களில் திருநாவுக்கரசு அடிகளார் எடுத்துக்காட்டுகின்றார்.

"நக்கம் வந்து பலியிடு என்றார்க்கு இட்ட
மிக்க தையலை வெள்வனை கொள்வது
தொக்க நீர் வயல் தோணிபுரவர்க்குத்
தக்கதென்று தமது பெருமைக்கே."

என்னும் பாடல் "பிச்சைக்கு வந்தவன் பெண்ணுக்கு மாப்பிள்ளை" என்ற பழமொழியை நினைவுறுத்துவதாய் அமையக் காணலாம்.

"நரிவரால் கவ்வச்சென்று நற்றசை இழந்த கதை"யும் அப்பரடிகளால் இரு இடங்களில் கூறப்பெற்றுள்ளது. கதையை பிழிந்தெடுத்த சாறென இப்பழமொழி அமைகின்றது.

எந்த ஓர் இலக்கியமும், மனிதனை விட்டு விலகி நின்றால் நிலைக்க முடியாது. சாதாரண மனிதனின் கருத்துகளும், பேச்சுகளும் இலக்கியத்தில் இடம்பெறும் போது அவை இலக்கியத்திற்கு உயிரோட்டம் தருகின்றன. தமது காலச் சமூகத்தினை, அதன் பண்பாட்டினை செப்பம் செய்ய வேண்டிய கடப்பாடு சமய, சமுதாய போராளியான திருநாவுக்கரசருக்கு இருந்தது. அவர்தம் பாடல்கள் சராசரி மனிதருக்கும் சென்றடைய வேண்டிய தேவை இருந்தது. எனவே, அப்பர் தேவாரத் திருப்பாடல்கள், நாட்டுப்புற மக்களுடைய கருத்துக்களை மட்டுமன்றி அவர்களுடைய பேச்சு வழக்குகளை- பழமொழி முதலான வழக்காறுகளை உள்ளடக்கியதாக அமைந்ததில் வியப்பேதும் இல்லை.

ற. நிஷாந்தன்
விஞ்ஞான பீடம்
முதலாம் வருடம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

மனிதனை மனிதன் அறிந்துகொள்ளும் ஒரு
மகத்தான வழிமுறையே நட்பு.
நட்பு இன்றிய மனிதனும் இல்லை...
நட்பு இன்றிய உயிர்களும் இல்லை...

பார்த்தால் வருவது காதல்
பார்க்காமல் வருவது மோதல்
பார்த்து பேசி பழகிய பின்னர்
பதமாய் முகிழ்வதே நட்பு.


மலர்களில் உள்ளது மணம்
மனங்களில் உள்ளது உணர்வு
உன் உள்ளே இருப்பது-நட்பு
அதை வெளிப்படுத்த கிடைத்திடும் நல்லுறவு.

உள்ளங்கள் பல ஒன்றுபட்டு
கைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து
பிறப்பில் வெவ்வேறாயினும் உணர்வுகளில் ஒற்றுமையாய்
உள்ளத்தில் நிலைத்தும் தனித்தும் இருப்பது-நட்பு.

பணம் உள்ளவரிடம் குணம் இருப்பதில்லை
குணம் உள்ளவரிடம் பணம் இருப்பதில்லை
